இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 156 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – தை 01 – வியாழக்கிழமை 15 ஜனவரி 2026 – வெளியூர் 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 156 : Thiruvalluvar Year - 2056 - Thai 01 - Thursday 15 January 2026 - Dak 16 Pages ₹ 5.00


## அண்ணா நகரில் அதிநவீன ஆதார் சேவை மையம் திறப்பு!

சென்னை, ஜன. 15 -

சென்னை அண்ணா நகர் கிழக்கில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதிச் சேவைகள் நிறுவன கட்டிடத்தில் புதிதாக ஆதார் சேவை மையம் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் திறப்பு விழா நேற்று முன்தினம் நடந்தது. தமிழ்நாடு மின் ஆளுமை முகமை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் ஆல்பி ஜான் வர்கீஸ் கலந்து கொண்டு மையத்தைத் திறந்து வைத்தார்.

## சென்னை கே.எம்.சி.யில் புறநோயாளிகளுக்கு அடையாள அட்டை!

சென்னை, ஜன. 15 –

கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளிகளை பார்க்க வரும் பார்வையாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் பணி தொடங்கியுள்ளது.

மருத்துவமனையில் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சுகாதாரத் துறை செயலர் அறிவுறுத்தினார்.

மருத்துவமனையில் நோயாளிகள் மற்றும் உதவியாளருக்கு ஏற்கெனவே அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகிறது. அதில் நோயாளி பெயர், வயது, தொடர்பு எண் உள்ளிட்ட விவரங்கள் இடம் பெற்றிருக்கும்.

ஒரு நோயாளிக்கு ஒரு நபர்: தற்போது நோயாளியை சந்திக்க வரும் மற்ற நபர்களுக்கும், நோயாளி சிகிச்சை பெறும் துறை சார்ந்த குறியீட்டுடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்படுகிறது என்றார்.

## 2026–ல் ‘திராவிட மாடல்’ ஆட்சி 2.0 தொடர மக்கள் முடிவெடுத்துவிட்டனர்!

# தமிழ்நாடெங்கும் மகிழ்ச்சிப் பொங்கல் பொங்கட்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பொங்கல் திருநாள் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஜன. 15 -**

**‘தமிழ்நாடெங்கும் புதுப்பானையில் பொங்கும் பொங்கல் மகிழ்ச்சிப் பொங்கலாக அமைந்திட வாழ்த்துகிறேன்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள பொங்கல் திருநாள் வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள பொங்கல் திருநாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

உலகத் தமிழர் அனைவருக்கும் தமிழ்ப் பண்பாட்டுப் பெருநாள் தைத்திருநாள் உழவைப் போற்றும் அறுவடைத் திருநாளாம் பொங்கல் நல்வாழ்த்துகளை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பச்சரிசி, சர்க்கரை, தித்திக்கும் செங்கரும்பு, புதிய வேட்டி - சேலை, 3,000 ரூபாய் ரொக்கம் என நமது ‘திராவிட மாடல்’ அரசு வழங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பால் தமிழ்நாடெங்கும் பொங்கலை மிகச் சிறப்பாகக் கொண்டாட மக்கள் தயாராகி விட்டனர்.



நானும், இன்று (ஜனவரி 14) சென்னை சங்கமம் கலைவிழா, ஜனவரி 17 அன்று உலகப் புகழ்பெற்ற மதுரை அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு என பொங்கல் சிறப்பு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள ஆர்வத்துடன் ஆயத்தமாகியுள்ளேன்.

### வளர்ச்சிப் பயணத்தில் ஒருவரையும் பின்தங்க விடமாட்டோம்!

அரசு ஊழியர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம், கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினிகள், தூய்மைப் பணியாளர்கள் செவிலியர்கள் எனப் பல்வேறு தரப்பினரின் நீண்டநாள் கோரிக்கைகள் நிறைவேற்றம் என இந்தப் பொங்கல் அனைவருக்கும் மகிழ்ச்சிப் பொங்கலாக அமையவேண்டும் என மக்களின் மனமறிந்து நமது அரசு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒருவரையும் பின்தங்க விடமாட்டோம், அனைவரும் வெல்வோம் ஒன்றாக என நாள்தோறும் நலத்திட்டங்கள் தொடர்கின்றன.

அடுத்த 5 ஆண்டுகள் செய்ய வேண்டிய பணிகளுக்கும் இப்போதே தயாராகும் வகையில், தமிழ்நாட்டு மக்களிடம் ‘உங்க கனவ சொல்லுங்க’ என அவர்களின் கோரிக்கைகள், தேவைகளைக் கேட்டறிந்து அவற்றை 2030க்குள் நிறைவேற்ற உறுதிபூண்டுள்ளேன். கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, அமைதி, மத நல்லிணக்கம், சமத்துவம் என ஆரோக்கிய அரசியலை முன்னெடுக்கும் இந்த நல்லாட்சி, திராவிட மாடல் 2.0 வடிவில் தொடர வேண்டும் என மக்களான நீங்களும் மனப்பூர்வமாக முடிவெடுத்து விட்டீர்கள்.

### மகிழ்ச்சிப் பொங்கலாக அமைந்திட வாழ்த்துகள்!

பொங்கல் திருவிழாவிற்காக வெளியூர் சென்று திரும்புவோர் பாதுகாப்பாக பயணங்களை மேற்கொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

உழவர் பெருங்குடி மக்களை வணங்கி, புத்தாடை, வண்ணக் கோலம், உறவினர்களைச் சந்தித்து மகிழும் உற்சாகம், விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், கால்நடைகளுக்கு நன்றி செலுத்தும் பண்பு ஆகியவற்றோடு தமிழ்நாடெங்கும் புதுப் பானையில் பொங்கும் பொங்கல் மகிழ்ச்சிப் பொங்கலாக அமைந்திட என எனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துகள்! பொங்கலோ பொங்கல்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

# தலைமைச் செயலகத்தில் சமத்துவப் பொங்கல் விழா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அலுவலர்களுடன் கொண்டாடினார்!

**சென்னை, ஜன. 15 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.01.2026) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவில், பொங்கல் பானையில் பொங்கல் வைத்து, தலைமைச் செயலக அலுவலர்களுடன் பொங்கல் விழா கொண்டாடினார்.**

**அதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள், நாதஸ்வர இசை நிகழ்ச்சியை கேட்டு ரசித்து, தலைமைச் செயலாளர், துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் தலைமைச் செயலக அலுவலர்களுக்கு பொங்கல் வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்.**

பின்னர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

தமிழ்நாடு முழுவதும் நாம் சமத்துவப் பொங்கலை கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். “எல்லார்க்கும் எல்லாம்” என்ற இலக்கை நோக்கி, சமத்துவ நிலையை அனைவரும் அடைந்திடும் நோக்கத்தோடு, நம்முடைய திராவிட மாடல் அரசு பணியாற்றிக் கொண்டிருக்கிறது; இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், உழைத்துக் கொண்டிருக்கிறது.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.1.2026) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவில் கலந்து கொண்டு, பொங்கல் வாழ்த்துத் தெரிவித்து உரையாற்றினார். இவ்விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள், தலைமைச் செயலக அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

உழைத்துக் கொண்டிருப்பவர்கள் என்று சொன்னால், நாங்கள் மட்டுமல்ல, நீங்களும் சேர்ந்துதான் உழைத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

### நேரம், காலம் பார்க்காமல் உழைத்துக் கொண்டிருக்கிறீர்கள்!

தமிழ்நாட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தலைமைச் செயலகத்தில் நீங்கள் எல்லோரும் நேரம், காலம் பார்க்காமல், உழைத்துக் கொண்டிருக்கிறீர்கள். அப்படிப்பட்ட உங்களோடு, இந்த பொங்கலை கொண்டாடுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த மகிழ்ச்சி, உங்கள் உள்ளங்களிலும், உங்களுடைய இல்லங்களிலும், பொங்கட்டும்! பொங்கட்டும்! என்று இந்த இனிய நேரத்தில் எடுத்துச் சொல்லி, உங்கள் அனைவருக்கும் என்னுடைய பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இவ்விழாவில், துணைமுதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர், துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.